(3) மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பாராட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சரும், இந்தச் சட்ட மன்றத்திலே பத்தாண்டுக் காலமாக உறுப்பினராகவும், ஐந்தாண்டுகள் எதிர்க் கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு, மதுரைப் பல்கலைக் கழகம், அவர்களுடைய இலக்கிய சேவைகளைப் பாராட்டி, 'டாக்டர்' பட்டம் கொடுத்திருப்பதை, இந்த மாமன்றம் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கும் என்பதில் ஐயம் இல்லை. இந்தப் பேரவையின் தலைவர் என்ற முறையிலும், இந்த மாமன்றத்தில் உள்ள எல்லோருடைய சார்பிலும், நாவலர் அவர்களுக்கு என்னுடைய நல் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் நான் தெரிவிக்கிறேன். (பலத்த கரவொலி).

மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்தப் பெரிய பெருமையைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்வதைவிட, வைகையாற்றின் கரையில் புதிதாகத் தோன்றியிருக்கும் மதுரைப் பல்கலைக்கழகம், அவர்களுக்கு டாக்டர் பட்டம் அளித்ததன் காரணமாக தனக்கு ஒரு பெரிய பெருமையைத் தேடிக் கொண்டிருக்கிறது, கீர்த்தியைச் சேர்த்துக் கொண்டிருக்கிறது என்று தான் நான் கருதுகிறேன்.

நாவலர் அவர்களை நான் 30 ஆண்டுகாலமாக மிக நன்றாக அறிவேன். தமிழ் நாட்டில் இலக்கியத் துறையிலும், அரசியல் துறையிலும், சமுதாயத் துறையிலும், இந்தத் தலைமுறையில் எத்தனையோ முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றால், நாவலர் அவர்களுடைய பங்கு அதில் மிகப் பெரிய பங்கு என்பதை இந்த நாட்டில் உள்ளவர்கள் அத்தனைபேரும் ஒப்புக்கொள்வார்கள் என்றே நம்புகிறேன். அதில் இரண்டாவது கருத்துக்குக் கொஞ்சங்கூட இடம் இருக்காது என்றும் நம்புகிறேன்.

அவர்களை நான் சிறந்த கல்வியாளராகக் கருதுகிறேன்; அவர்களை பெரிய, தமிழ் நாட்டில் எத்தனையோ தலைமுறையில் கிடைக்காத, சிறந்த பேச்சாளராகக் கருதுகிறேன்; பத்திரிகை ஆசிரியராக, நல்ல அரசியல் தொண்டராக, அரசியல் தலைவராக, இன்னும் பெரிய சமதர்ம வீரராக, பகுத்தறிவுக் கொள்கையின் மூலம் புதிய உலகத்தைச் சிருஷ்டிக்கும் புத்துலகச் சிற்பியாக நான் அவர்களை அறிகிறேன். தமிழ் நாடும் அறிந்திருக்கிறது.

நாவலர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மட்டுமல்ல, நாவலர் அவர்கள் தமிழ் நாட்டில் இன்றைக்கு இருக்கும் தலைவர்களில் பெரிய தலைவர் என்ற வகையில் சிறப்புற்று விளங்கும்போது, மதுரைப் பல்கலைக் கழகம் அவர்களுடைய இலக்கிய சேவைக்கு மட்டுமல்லாமல், வேறு எத்தனையோ அவர்களுடைய உதார குணங்களுக்காகவும் எடுத்துக்காட்டாக இருக்கும் வகையில் சிறப்பித்திருக்கிறது என்பதைப் பார்த்துப் பெருமைப் படலாம். தமிழ் நாட்டின் அரசியலில், அரசியல் வாழ்வில், நாவலர் அவர்கள், மிகுந்த நிதானத்துடனும், அடக்கத்துடனும், 31 ஆண்டுக்காலமாக சேவை

செய்து வந்திருக்கிறார்கள். அரசியலைப்பற்றிச் சொல்லும்போது, அன்றைய நிலைமைகள் நினைவுக்கு வருகின்றன. 30 ஆண்டு காலத்திற்கு முன்பு, எந்த நிலையில் இருந்து, இன்றைக்கு எவ்வளவு முன்னேற்றங்களைப் பெற்றிருக்கிறது தமிழ்நாடு என்று எண்ணும்போது, நாவலர் அவர்களுடைய பணி போற்றத் தக்கது. எவ்வளவோ தடவைகள் அவர்கள் சிறைச்சாலைக்குப் போயிருக்கிறார்கள். இந்த நாட்டில் வெயிலிலும், வாய்க்கால் ஓரத்திலும், தோப்பு துறவுப் பகுதிகளிலும், சண்டமாருதமென செயலாற்றிய சிற்பிகளாவார்கள் அவர்கள்.

ஒரு காலத்தில் இலக்கியம், கலை என்றாலே அவையெல்லாம் பல்கலைக் கழகத்தின் புத்தகப் பேழைகளில் இருக்கும் நிலைதான் இருந்தது. அந்த காலத்தில், தமிழ் என்றால், அல்லி அரசாணி கதை, நல்ல தங்காள், பெரிய எழுத்துக் கதைகள், என்ற அளவில் புழுகி படிந்த நிலைதான் இருந்தது. சாதாரண, சிறிய ஏழை எளிய மக்களும் நல்ல வகையில் அறிந்து கொள்ளும் வகையில், கலிங்கத்துப்பரணி, புறநானூறு, போன்ற இலக்கியங்களை வெளியுலகத்திற்குப் பரப்பிய சிற்பியாவார்கள் அவர்கள். இன்றைக்கு தமிழ் நாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதில் அவர்களுக்கு ஒரு பெரிய இடம், மகத்தான இடம் உண்டு என்பதில் எந்த விதமான சந்தேகமும் கிடையாது.

நிதானம் என்றால், மிக்க நிதானம் உள்ளவர்கள். மற்றவர்களுக்கு கோபம் வரும் அளவிற்கு, அவ்வளவு பெரிய நிதானத்தைக் கையாண்டு, கட்சிக்கு மட்டும் சொந்தக்காரர் என்பதில்லாமல், எத்தனையோ தலைசிறந்து வரும் தலைவர்களில் சிறந்தவர். அப்படிப்பட்ட நாவலர் அவர்களுக்கு மதுரைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்து மிகப் பெரிய பெருமையைச் செய்கிறது என்பது அவர்களுக்கு இன்னமும் உற்சாகம் கொடுத்திருக்கிறது. சமுதாய முன்னேற்றத்திற்கு, மேம்பாட்டிற்கு, பொது வுடமைச் சமுதாயமாக வருவதில் சிறந்த தொண்டாற்ற நல்ல இதயம் உள்ள பண்பாளரை மதுரைப் பல்கலைக்கழகம் சிறப்பித்திருப்பதை, உண்மையிலேயே இந்த மாமன்றத்தில் உள்ள எல்லாப் பகுதி உறுப்பினர்களும் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

மாண்புமிகு நாவலர் அவர்கள், இன்னும் பன்னெடுநாள், நீண்ட நெடுநாள் வாழ்ந்து, தமிழ்க் குலத்திற்கும், மனித சமுதாயத்திற்கும், ஒப்பற்ற சேவை களைச் செய்து நீடுழி வாழ வேண்டும் என்று நம்முடைய இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைச் சொல்லுகிறோம் என்று கூறி, இதை ஆமோதிக்கும் வகையில் எல்லோரும் கரவொலியின் மூலம் இந்தக் கருத்துக்களை ஆதரிப்பீர்கள் என்று கூறி அமர்கிறேன். (பலத்த கரவொலி).

(4) அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. 22—1—1971 அன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவின்படி பேரவையின் நிகழ்ச்சி ஏற்கனவே அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளபடி நடைபெறும்.